# தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

(தேசியத் தரமதிப்பீட்டுக் குழுவின் B+ தகுதி பெற்றது)

# TAMIL UNIVERSITY, THANJAVUR

**(ACCREDITED BY NAAC WITH B+ GRADE)**

**2025-26** ஆம் கல்வியாண்டு

## சேர்க்கை விவரக் கையேடு

- ஐந்தாண்டு ஒருங்கிணைந்த முதுகலைப் பட்டப் படிப்பு **(Five Years Integrated Post Graduate)**
- முதுகலைப் பட்டம் **(M.A., M.Sc., M.P.A.,M.F.A)**
- முதுகலைப் பட்டயம் (P.G. Diploma)
- பட்டயம் (Diploma)
- சான்றிதழ் (Certificate)

இணையதளம் : www.tamiluniversity.ac.in

தொலைபேசி : 04362-227089, 226720

மின்னஞ்சல் : tamilunivreg@gmail.com,
tuadmissionsection@gmail.com,

தமிழ்மொழி, பண்பாடு, வரலாறு, கலை மற்றும் அறிவியல் தொடர்பான பாடங்களை ஆய்வு செய்யும் ஓர் உயராய்வு மையமாக 1981ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 15ஆம் நாள் தமிழ்ப் பல்கலைக்கழகம் தொடங்கப்பெற்றது. தஞ்சை-திருச்சி தேசிய நெடுஞ்சாலையில், தஞ்சாவூர் புதிய பேருந்து நிலையத்திலிருந்து 2 கி.மீ. தொலைவில், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அருகில் இயற்கை வளம் சூழ்ந்த எழில்மிகு நிலப்பரப்பில் 975 ஏக்கர் பரப்பளவில் பல்கலைக்கழகம் அமைந்துள்ளது. பல்கலைக்கழக நல்கைக்குழுவின் (UGC) அங்கீகாரத்தைப் பெற்று இப்பல்கலைக்கழகம் ஐந்து புலங்களில் இருபத்தாறு துறைகளுடன் கடந்த 44 ஆண்டுகளாக சிறப்பாக இயங்கி வருகிறது.

www.tamiluniversity.ac.in எனும் தமிழ்ப் பல்கலைக்கழக இணையதளத்தில் 2025-26ஆம் ஆண்டிற்கான மாணவர்ச் சேர்க்கைக்கான விண்ணப்பப் படிவம் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. விண்ணப்பப் படிவத்தை மாணவர்கள் பதிவிறக்கம் செய்து தாங்கள் கையெழுத்தால் முழுமையாகப் பூர்த்திசெய்து உரிய சான்றிதழ்களின் நகல்களுடன் விண்ணப்பக் கட்டண இரசீதையும் இணைத்து **‘பதிவாளர்(பொ.), தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-613010’** என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

## வசதிகள்

- தென்னிந்தியாவின் மிகப்பெரிய நூலகம்.
- இணையதள வசதி (WiFi).
- வேலை வாய்ப்பு வழிகாட்டி மையம்.
- மாணவர் குறைதீர் மையம்.
- இருபாலருக்கான தனித்தனி விடுதி வசதிகள்.
- மத்திய, மாநில அரசுகளின் கல்விக்கான உதவித்தொகை.
- சிறப்புப் பயிற்சி வகுப்புகள்.
- **ஒருங்கிணைந்த ஐந்தாண்டு முதுகலைத் தமிழ் (25 மாணவர்கள்) மற்றும் முதுகலைத் தமிழ் (20 மாணவர்கள்) பட்டப்படிப்பு பயிலும் மாணவர்களுக்கு அரசின் விதிமுறைகளுக்குட்பட்டுத் தமிழக அரசின் சிறப்பு உதவித்தொகை மாதந்தோறும் ரூ.2000/- வழங்கப்படுகிறது.**
- கல்வியில் சிறந்து விளங்கும் முதல் மூன்று மாணவர்களுக்கான கல்வி ஊக்கத்தொகை.
- **ஒருங்கிணைந்த ஐந்தாண்டு படிப்புகளில் பயிலும் மாணவர்கள், மூன்றாமாண்டு நிறைவு பெற்றதும் விருப்பத்தின் அடிப்படையில் இளங்கலைப் பட்டத்துடன் வெளியேறும் வசதி.**
- பட்டப்படிப்புடன் கூடுதலாகப் பகுதி நேரத்தில் ஏதேனும் ஒரு பட்டயம் / சான்றிதழ் படிப்புகள் படிக்கும் வசதி.
- மத்திய, மாநிலப் பணித்தேர்வுகளை எழுதுவதற்கான பயிற்சி வகுப்புகள்.
- ஆசிரியர் தகுதித்தேர்வு (TET) மற்றும் பல்கலைக்கழக நல்கைக் குழுவால் வழங்கப்படும் தேசியத் தகுதித்தேர்வு / மாநிலத் தகுதித் தேர்விற்கான (NET,SET and CSIR) இலவசப் பயிற்சி வகுப்புகள்.
- நாட்டு நலப்பணித் திட்டம்.
- மேம்படுத்தப்பட்ட உடற்பயிற்சிக்கூடம், தரம் வாய்ந்த விளையாட்டு மைதானம்.

## அ) முதுகலை பட்டப் படிப்புகள்

| 1. ஒருங்கிணைந்த ஐந்தாண்டு முதுகலைப் பட்டப் படிப்புகள் **(5 years Integrated Post Graduate Degree Courses)** | | | | |
|---|---|---|---|---|
| வ. எண் | பாடம் | கல்வித்தகுதி | சேர்க்கைக்கான இடங்கள் | பட்டம் வழங்கும் துறை |
| 1. | ஒருங்கிணைந்த ஐந்தாண்டு முதுகலைத் தமிழ் (Five Years Integrated M.A. Tamil) | +2 தேர்ச்சி | 50 | இலக்கியத்துறை |
| 2. | ஒருங்கிணைந்த ஐந்தாண்டு முதுகலை வரலாறு (Five Years Integrated M.A. History) | +2 தேர்ச்சி | 40 | கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறை |
| 2. முதுகலை / முதுஅறிவியல் பட்டப் படிப்புகள் **(2 years Post Graduate Degree Courses)** | | | | |
| 1. | முதுகலைத் தமிழ் M.A. Tamil | இளங்கலைத் தமிழ் அல்லது பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஓர் இளநிலைப் பட்டம் | 40 | இலக்கியத்துறை |
| 2. | முது நுண்கலை சிற்பம் M.F.A Sculpture | இளங்கலைத் தமிழ் / வரலாறு அல்லது பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஓர் இளநிலைப் பட்டம் | 20 | சிற்பத்துறை |
| 3. | முதுகலை இசை M.A. Music | இளங்கலைத் தமிழ் அல்லது பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஓர் இளநிலைப் பட்டம் | 20 | இசைத்துறை |

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | முதுகலை நாடகம் மற்றும் அரங்கக்கலை<br>M.A. Performing Arts | இளங்கலைத் தமிழ் / வரலாறு அல்லது பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஓர் இளங்கலைப் பட்டம் | 20 | நாடகத்துறை |
| 5. | முதுகலை வரலாறு மற்றும் தொல்லியியல்<br>M. A. History and Archaeology | இளங்கலை வரலாறு அல்லது பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஓர் இளங்கலைப் பட்டம் | 50 | கடல்சார் வரலாறு மற்றும் கடல்சார் தொல்லியல் துறை |
| 6. | முதுகலை மொழியியல்<br>M. A. Linguistics | இளங்கலைத் தமிழ் அல்லது பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஓர் இளங்கலைப் பட்டம் | 20 | மொழியியல் துறை |
| 7. | முதுகலை சமூகப்பணி<br>Master of Social Work | பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஓர் இளநிலைப் பட்டம் | 20 | சமூகஅறிவியல் துறை |
| 8. | முது அறிவியல் சுற்றுச்சூழல் மற்றும் மூலிகை அறிவியல்<br>M.Sc. Environmental and Herbal Science | பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஓர் இளநிலை அறிவியல் பட்டம் | 20 | சுற்றுச்சூழல் மற்றும் மூலிகை அறிவியல் துறை |
| 9. | முது அறிவியல் கணிப்பொறி அறிவியல்<br>M.Sc. Computer Science | பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஓர் இளநிலை அறிவியல் / கணிப்பொறி அறிவியல் / B.C.A. பட்டம் | 20 | கணிப்பொறி அறிவியல் துறை |
| 10. | முதுகலை மெய்யியல்<br>M.A Philosophy | பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு இளங்கலைப் பட்டம் | 20 | மெய்யியல் துறை |

## ஆ) முதுநிலைப் பட்டயம் பாடப் பிரிவுகள் (ஓராண்டு)

(Post Graduate Diploma Courses)

| வ. எண் | பாடப்பிரிவு | சேர்க்கைக்கான இடங்கள் | தகுதி | துறை | கட்டணம் ரூ. |
|---|---|---|---|---|---|
| 1. | மொழிபெயர்ப்பு | 20 | ஏதாவது ஒரு இளங்கலைப் பட்டம் | மொழிபெயர்ப்புத் துறை | 5000/- |
| 2. | அகராதியியல் | 20 | ஏதாவது ஒரு இளங்கலைப் பட்டம் | அகராதியியல் துறை | 5000/- |
| 3. | யோகா | 20 | ஏதாவது ஒரு இளங்கலைப் பட்டம் | மெய்யியல் | 5000/- |
| 4. | நாடகம் | 20 | ஏதாவது ஒரு இளங்கலைப் பட்டம் | நாடகத்துறை | 5000/- |

## இ) பட்டயம் பாடப் பிரிவுகள் - (ஓராண்டு)

## (Diploma Courses)

| வ. எண் | பாடப்பிரிவுகள் | சேர்க்கைக்கான இடங்கள் | தகுதி | துறை | கட்டணம் ரூ. |
|---|---|---|---|---|---|
| 1. | இசை | 15 | +2 தேர்ச்சி மற்றும் இசையில் சான்றிதழ் | இசைத்துறை | 3000/- + செய்முறைக் கட்டணம் ரூ.500/- |
| 2. | பரதநாட்டியம் | 15 | +2 தேர்ச்சி மற்றும் பரதநாட்டியப் பயிற்சியில் சான்றிதழ் | இசைத்துறை | 3000/- + செய்முறைக் கட்டணம் ரூ.500/- |
| 3. | ஆவண மேலாண்மை | 40 | +2 தேர்ச்சி | அரிய கையெழுத்துச்சுவடித் துறை | 3000/- |
| 4. | நாட்டுப்புறவியல் | 20 | ஏதேனும் ஓர் இளங்கலைப் பட்டம் | நாட்டுப்புறவியல் துறை | 3000/- |
| 5. | ஒப்பிலக்கியம் | 20 | ஏதேனும் ஓர் இளங்கலைப் பட்டம் | இந்திய மொழிகள் மற்றும் ஒப்பிலக்கியப்பள்ளி | 3000/- |
| 6. | சுவடியியல் | 20 | +2 தேர்ச்சி | ஓலைச்சுவடித் துறை | 3000/- |
| 7. | கல்வெட்டியல் | 10 | ஏதாவது ஒரு இளங்கலைப் பட்டம் | கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறை | 5000/- |
| 8. | மூலிகை அழகுக்கலை | 20 | +2 தேர்ச்சி | சித்த மருத்துவத்துறை | 3000/- + செய்முறைக் கட்டணம் ரூ.500/- |
| 9. | கணிப்பொறிப் பயன்பாடு | 20 | +2 தேர்ச்சி | கணிப்பொறி அறிவியல் துறை | 3000/- + செய்முறைக் கட்டணம் ரூ.500/- |
| 10. | யோகா | 20 | +2 தேர்ச்சி | மெய்யியல் | 3000/- |
| 11. | திருக்கோயில் நிர்வாகம் | 20 | +2 தேர்ச்சி | மெய்யியல் | 3000/- |
| 12. | சைவ சித்தாந்தம் | 20 | +2 தேர்ச்சி | மெய்யியல் | 3000/- |

## ஈ) சான்றிதழ் - பாடப் பிரிவுகள் - (ஓராண்டு)
## (Certificate Courses)

| வ. எண் | பாடப்பிரிவு | சேர்க்கை இடங்கள் | தகுதி | துறை | கட்டணம் ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | சிற்பக் கலைப் பயிற்சி | 10 | 10ஆம் வகுப்பு தேர்ச்சி | சிற்பத்துறை | 1500/- + செய்முறைக் கட்டணம்.500/- |
| 2 | இசை | 10 | 10ஆம் வகுப்பு தேர்ச்சி | இசைத்துறை | 1500/- + செய்முறைக் கட்டணம் ரூ.500/- |
| 3 | பரதநாட்டியம் | 10 | 10ஆம் வகுப்பு தேர்ச்சி | இசைத்துறை | 1500/- + செய்முறைக் கட்டணம் ரூ.500/- |
| 4 | நாட்டுப்புறவியல் | 20 | 12ஆம் வகுப்பு தேர்ச்சி | நாட்டுப்புறவியல் | 1500/- |
| 5. | யோகா | 20 | 12ஆம் வகுப்பு தேர்ச்சி | மெய்யியல் | 1500/- |
| 6. | தமிழ் | 20 | 12ஆம் வகுப்பு தேர்ச்சி | இந்திய மொழிகள் மற்றும் ஒப்பிலக்கியப்பள்ளி | 1500/- |

### விதிமுறைகள் :

- அனைத்துப் பாடப்பிரிவுகளுக்கும் பயிற்றுமொழி தமிழாகும்.

### ஐந்தாண்டு ஒருங்கிணைந்த முதுகலை (Five Years Integrated P.G.) :

- பள்ளிக்கல்வித் துறையினால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தில் 10+2 கல்விப் படிநிலைகளில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மொழிப் பாடமாகத் தமிழ் படித்திருக்க வேண்டும்.

### முதுகலை / முதுஅறிவியல் :

- உயர்கல்வித் துறை மற்றும் பல்கலைக்கழக நல்கைக்குழு விதிகளின்படி அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தில் 10+2+3 கல்விப் படிநிலைகளில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இளங்கலை / இளநிலை அறிவியல் படிப்புகளில் மொழிப் பாடமாகத் தமிழ் படித்திருக்க வேண்டும்.
- இளநிலைப் படிப்பில் ஐந்தாம் பருவத்தில் தேர்ச்சி பெற்று, ஆறாம் பருவ முடிவுகளுக்காகக் காத்திருக்கும் மாணவர்கள் விண்ணப்பம் செய்யலாம். ஒட்டு மொத்தத் தேர்ச்சி மதிப்பெண் பட்டியல் அளித்த பின்னரே சேர்க்கை உறுதி செய்யப்படும்.

மேற்கண்ட அனைத்துப் படிப்புகளிலும் மாணவர் சேர்க்கை எண்ணிக்கையைப் பொறுத்து ஒரு குறிப்பிட்ட பாடத்தை நடத்துவது குறித்துப் பல்கலைக்கழகம் முடிவெடுக்கும்.

**வயது வரம்பு:**

01.07.2025 அன்று ஒருங்கிணைந்த ஐந்தாண்டு முதுகலைப் பட்டயப் படிப்பிற்கு 21 வயதுக்குட்பட்டவர்களாகவும் மற்றும் முதுகலை / முதுஅறிவியல் பட்டப் படிப்புகளுக்கு 27 வயதுக்குட்பட்டவர்களாகவும் இருத்தல் வேண்டும் மேலும் SC/SCA/ST/BC/BCM/MBC/DNC பிரிவினருக்கு வயது வரம்பில் 3 ஆண்டுகள் தளர்வும், மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு 5 ஆண்டுகள் தளர்வும் அளிக்கப்படும்.

**விண்ணப்பக் கட்டணம் :**

| பிரிவு | ஒருங்கிணைந்த முதுகலை / முதுகலை / முது அறிவியல் / முதுநிலை நிகழ்த்துக்கலை / முதுநிலைப் பட்டயம் / பட்டயம் / சான்றிதழ் |
|---|---|
| பொதுப் பிரிவு | ரூ.590 (18% GST/- உட்பட) |
| ஆதிதிராவிடர் / பழங்குடியினர் (சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்) | ரூ.295 (18% GST/- உட்பட) |

விண்ணப்பிக்க விரும்புவோர் www.tamiluniversity.ac.in எனும் தமிழ்ப் பல்கலைக்கழக இணையதள முகவரியிலிருந்து விண்ணப்பங்களைப் பதிவிறக்கம் செய்து, நிறைவு செய்த விண்ணப்பத்தினை '**பதிவாளர்(பொ.), தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்**' என்ற பெயரில் விண்ணப்பக் கட்டணம் செலுத்திய இரசிதுடன் அல்லது வங்கி வரைவோலையுடன் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

அஞ்சல் வழியாகப் பெற விரும்புவோர் '**பதிவாளர்(பொ.), தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்**' என்ற பெயரில் உரிய விண்ணப்பக் கட்டணத்தை SBI Collect Online வழியாகவோ அல்லது வங்கி வரைவோலையாகப் பெற்று ரூ.50/-இக்கான அஞ்சல்தலை ஒட்டிய தன்முகவரியிட்ட உறை வழியாகவோ பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

## விண்ணப்பத்தை நிறைவு செய்தல் :

**விண்ணப்பக்கட்டணத்தை இணையவழி செலுத்துவதற்கான வழிமுறைகள் :**

- தமிழ்ப் பல்கலைக்கழகச் சேர்க்கைக்கான இணையவழி விண்ணப்பத்தை நிறைவு செய்யும் முன்னர், சேர்க்கைக் கையேட்டில் உள்ள நெறி முறைகளைப் படிக்கவும்.
- விண்ணப்பதை நிறைவு செய்யும் முன்னர் உரிய கட்டணத்தை, தமிழ்ப் பல்கலைக்கழக இணையத்தின் (www.tamiluniversity.ac.in) வழியாகக் கீழ்க்காணும் விதிமுறைப்படி விண்ணப்பக்கட்டணம் செலுத்தவும்.

(1) மேற்கண்ட இணைப்பைச் சொடுக்கி **(Click Check Box to proceed for payment)** தேர்வுப் பெட்டியில் சொடுக்கவும் **(✓ I have read and accepted the terms and conditions stated above) .**

(2) பின்னர் proceed ஐ அழுத்தவும்.

(3) SBIயின் பணம் செலுத்தும் பக்கத்திற்குச் சென்று **Select Payment Category**இல் **CAMPUS EDUCATION APPLICATION FEE** என்ற பிரிவின்கீழ் தாங்கள் படிக்க விரும்பும் பாடத்தைத் தேர்ந்தெடுத்து **(எ.கா.) ஒருங்கிணைந்த முதுகலைப் பாடப்பிரிவிற்கு PGஐ தேர்ந்தெடுக்கவும்**) பிற தரவுகளை நிரப்பிப் பணத்தைச் செலுத்தவும்.

(4) பின்னர் இரசீதைப் பதிவிறக்கம் செய்து Printout ஆகவும் வைத்துக்கொள்ளவும்.

- பதிவிறக்கம் செய்த விண்ணப்பப்படிவத்தைத் தனது சொந்தக் கையெழுத்தால் பூர்த்தி செய்யவும். பின்னர் பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவத்துடன் தேவையான சான்றிதழ்களின் நகல்களையும் வங்கி இரசீதையும் இணைத்து அனைத்து இணைப்புகளுடன் விண்ணப்பத்தை, **பதிவாளர்(பொ.), தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் -613010** என்ற முகவரிக்கு அஞ்சல் வழியாக இறுதி நாளுக்குள் அனுப்பி வைக்க வேண்டும்.

- சேர்க்கைக்கு வரும்பொழுது,

  1. தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பிவைத்த விண்ணப்பத்தின் நகல்,
  2. தேவையான சான்றிதழ்களின் 2 நகல்கள்,
  3. அசல் சான்றிதழ்கள்.
  4. சிறப்புத் தகுதியின்கீழ் சேர்க்கைப்பெற விண்ணப்பிப்போர் சிறப்புத் தகுதிக்கான சான்றிதழ் நகல் ஆகியவற்றைக் கொண்டுவரவேண்டும்.
     - சேர்க்கைக் கட்டணங்களை முழுமையாகச் செலுத்திய மாணவர்களுக்கு மட்டுமே சேர்க்கை உறுதி செய்யப்படும். இதர விண்ணப்பதாரர்கள் காத்திருப்புப் பட்டியலில் வைக்கப்படுவார்கள்.
     - சேர்க்கை உறுதி செய்யப்பட்டதும் அசல் மாற்றுச்சான்றிதழை (Original TC) பல்கலைக்கழகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

மேற்குறித்த படிப்புகளில் சேர விரும்பும் மாணவர்கள் விண்ணப்பங்களைக் கைபேசி எண் உட்பட அனைத்து விவரங்களையும் முழுமையாக நிறைவு செய்து அஞ்சல் வழியாக சமர்ப்பிக்க வேண்டும். அஞ்சல் வழி அனுப்பப்படும் விண்ணப்பத்துடன் கல்வித்தகுதிச் சான்றிதழ்கள், சாதிச் சான்றிதழ்கள், மாற்றுச் சான்றிதழ் மற்றும் பிற சிறப்புத் தகுதிக்கான சான்றிதழ்கள் ஏதேனும் தேவையிருப்பின் அவற்றின் நகல்களிலும் சொந்தக் கையொப்பம் இட்டு (Self Attested Xerox Copies) இணைத்து

அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் அசல் சான்றிதழ்களை விண்ணப்பத்துடன் இணைத்தல் கூடாது.

**தமிழ்ப் பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட பிற நிறுவனத்தில் வழங்கப்பெறும் பட்டங்கள் :**

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் மற்றும் தொடர்பு முகவரி | தொலைபேசி எண்கள் | பாடங்கள் | வழங்கப்பெறும் பட்டம் |
|---|---|---|---|---|
| 1. | உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி,சென்னை – 600 113. | 044-22542992, 22542781 தொலைநகலி 22541436 | தமிழ் | 1. ஒருங்கிணைந்த ஐந்தாண்டு முதுகலைத் தமிழ் 2. முதுகலைத் தமிழ் |

இந்நிறுவனத்தில் சேர்ந்து படிக்க விரும்பும் மாணவர்கள் விண்ணப்பங்களை மேற்கண்ட நிறுவனத்திற்கு அனுப்ப வேண்டும். தமிழ்ப் பல்கலைக்கழகத்தால் வரையறுக்கப்பட்டுள்ள கல்வித்தகுதிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

# கல்விக்கட்டண விவரம்

| வ. எண் | கட்டண விவரம் | ஒருங்கிணைந்த முதுகலைப் படிப்புகள் (தமிழ், வரலாறு) ரூ. | முதுகலைப் படிப்புகள் ரூ. | முதுஅறிவியல் படிப்புகள் ரூ. |
|---|---|---|---|---|
| 1. | சேர்க்கைக் கட்டணம் | 100 | 100 | 100 |
| 2. | சிறப்புக் கட்டணம் | 500 | 500 | 500 |
| 3. | பயிற்றுக் கட்டணம் | 1500 பருவக் கட்டணம் | 2000 பருவக் கட்டணம் | 2000 பருவக் கட்டணம் |
| 4. | மேம்பாட்டுக் கட்டணம் | 100 | 100 | 100 |
| 5. | நூலகக் கட்டணம் | 200 | 250 | 250 |
| 6. | கணிப்பொறிக் கட்டணம் | 200 | 200 | 200 |
| 7. | பயிற்சிக் கட்டணம் | 500 | 500 | 500 |
| 8. | சோதனைக்கூடக் கட்டணம் | -- | -- | 2000 |
| 9. | விளையாட்டுப்போட்டிக் கட்டணம் | 100 | 100 | 100 |
| 10. | காப்புத்தொகை | 500 | 500 | 500 |
| 11. | நாட்டு நலப்பணி, இளைஞர் நலம், கலை மற்றும் பண்பாடு | 100 | 100 | 100 |
| 12. | இணையதள / அடையாள அட்டை | 100 | 150 | 150 |
| 13. | முன்னாள் மாணவர் சங்கம் | 500 | 500 | 500 |
| 14. | உள்கட்டமைப்பு வசதி | 1000 | 1000 | 1000 |
| 15. | மாணவர்கள் கூட்டுறவு நிதி | 50 | 50 | 50 |
| 16. | கூட்டுக் காப்பீடு | 30 | 30 | 30 |
| 17. | பிற பல்கலைக்கழகப் பட்டங்களை ஏற்பதற்கான கட்டணம் | --- | 200 | 200 |
| 18. | திறன் மேம்பாட்டுக் கட்டணம் | 500 | 500 | 500 |
| | **கூடுதல் ரூ** | **5980** | **6780** | **8780** |

ஒவ்வொரு பருவத்திற்கும் குறிப்பிடப்பட்டுள்ள பருவக்கட்டணத்தை மாணவர்கள் செலுத்தவேண்டும். மேற்குறிப்பிடப்பட்டுள்ள கல்விக்கட்டணங்கள் தமிழ்ப் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்ப் பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்களுக்கும் பொருந்தும். நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி கீழே தரப்பட்டுள்ளது.

பதிவாளர் (பொ)
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 010

**<u>விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் :</u>**

- ஒருங்கிணைந்த முதுகலைப் பட்டப் படிப்புகளுக்கு : **26.05.2025**
- முதுகலை / முதுஅறிவியல் படிப்புகளுக்கு : **20.06.2025**
- முதுநிலைப் பட்டயம், பட்டயம், சான்றிதழ் படிப்புகளுக்கு : **25.06.2025**

பதிவாளர் (பொ)